# இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல் 2275 எஸ்ஆர்ஐ) 2010

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுபபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3 கணக்காய்வு அவதானிப்பு

2275 ஆம் இலக்க கடன் தொடர்பில் நீர் பொருத்துதலிற்கான உயர்த்தும் கோபுரங்களின் (பீஈ4) விநியோகத்தின் வழங்கல் மற்றும் பாதுகாப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 98 % பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அதேநேரம் 1993 ஆம் இலக்க கடனின் கீழ் பிரதான வேலைகள், மூல நீர் பரிமாற்றங்கள், சுத்திகரிப்பு பொறித்தொகுதி, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஆக்குதல் வடிவமைப்பு மற்றும் கட்டியழுப்பல் (பீஏ5) தொடர்பான உள்ளக தொடர்புபட்ட வேலைகள் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 66 % மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இந்த உப ஒப்பந்தம் (பீஏ5) 2008 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் காரணமாக இது பூர்த்தியாக்க முடியவில்லை. பூர்த்தியாக்கல் திகதி 2011 பெப்ரவரி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 மார்ச் 30 இல் உள்ளவாறு நிர்மாண வேலைகளில் 79 % மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பூர்த்தியாக்கல் திகதி 2011 செப்டெம்பர் 30 வரை மெலும் நீடிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த இரண்டு உப செயற்திட்டங்களும் ஒன்று நிறுவப்பட வேண்டிய தேவையேற்பட்டமையால் பிந்திய உப செயற்திட்டத்தின் கீழான வேலையின் பூர்தியாக்கலின் தாமதம் முழுச் செயற்திட்டத்தினையும் நிறுவுவதில் தாமதத்தை விளைவித்திருந்தது.